தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௭	மலர்
௫௰	நள, ஆடி (1976 — ஜூலை — ஆகஸ்ட்)	௪

கன்னித் தமிழ்

திரு. ந. மு. கோவிந்தராய நாட்டார், B A., L. T.,

முன்னர்யாம் தமிழ்மொழியைப்பற்றித் 'தமிழ்ப் பொழிலில்' 'தனித் தமிழ்', 'செந்தமிழ்த் திறம்' என்ற தலைப்புக்களில் எழுதியிருந்தோம் இதுபோது மேற்குறித்த தலைப்பில் சில எழுத முயல்கின்றோம். 'கன்னித் தமிழ்' என்ற சொற்றொடரின் பொருள் மிக வெளிப்படையானது; பன்னூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றி இன்றும் இளமை குன்றாது 'வழக்குஞ் செய்யுளும் ஆயிருமுதலின்' நிலைத்து நிற்பது என்பது பொருளாகும். எபிரேயம், எகிப்தியம், கிரேக்கம், இலத்தீன், சமசுக்கிருதம், ஆகிய பழைய சிறந்த மொழிகள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்ப் பேச்சு வழக்கற்றதால் இவை இறந்த மொழிகள் என (Dead Languages) அழைக்கப்படுகின்றன. இன்று நம்மவரிற் சிலர் 'செத்த மொழி' என்ற சொற்றொடரைக் கேட்டால் சினந்து கொள்கின்றனர். ஆகலின், யாம் பேச்சு வழக்கற்ற மொழியென்றே கூறுவம் ஆங்கில அகராதி ஒன்று பலமொழிகளைச் செத்த மொழிகள் என்றே குறிப்பிட்டுள்ளது. மனோன்மணீயம் ஆசிரியர் பேரறிஞர் சுந்தரம் பிள்ளையவர்கள் கீழ்வரும் பாடலில் சமசுக்கிருதத்தை உலக வழக்கொழிந்த மொழி யென்றே குறிப்பிட்டுள்ளார்:

பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலை யாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

எம் மாணுக்கர் காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர் திரு சி. இலக்குவனுர் நடத்தி வந்த 'குறள்நெறி' என்ற வார இதழுக்கு யாம் எழுதிய ஒரு கட்டுரைக்குத் தோற்றுவாயாகக் கீழ்க்கண்ட வெண்பாவை எழுதியிருந்தோம் :

கட்டிளங் கன்னியாய்க் காலம் கடந்துநின்ருய்
சொட்டும் அமிழ்தத் துவர்வாயாய் — மட்டில்லா
மாட்சி யுடையாயிம் மாநிலத்தின் கட்டிலில்நீ
ஆட்சிசெய்வ தென்ருே அமர்ந்து.

இன்று இவ்வாறே தமிழ் மொழியின் இளமை குறித்துப் பல தமிழ் அறிஞர் எழுதியும் பாடியும் வருகின்றனர். கவிச் சக்கரவர்த்தி கம்பன் அன்றே 'என்றுமுளதென்றமிழ்' என்று இயம்பிச் சென்ருன் 'என்றுமுள' என்பதனுல் சாவா வரம் பெற்றது என்பது பெறப்படும்.

ஆனுல், இவ்வாறு கொன்னே 'கன்னித்தமிழ், கன்னித்தமிழ்' என்று கொக்கரித்துச் செல்லுவதில் பயனில்லே. கன்னியாய் இருத்தற்கு அடிப்படையான காரணங்கள் உண்டா என ஆராய்தல் வேண்டும். ஆகவின், அறிவியல் முறைப்படி (scientific) மொழிகள் பேச்சு வழக்கறுதற்கும் அருது வழங்கி வருவதற்கும் உள்ள காரணங்களே ஆய்வாம். முதற்கண் முன்னதை ஆராய்வாம்.

காரணங்கள்

1 எழுதப்படும் நிலேமை எய்திய ஒரு மொழியில் இலக்கியங்கள் ஏற்பட்ட பிறகு அம்மொழியின் எழுத்துக்களேயும் இலக்கியங்களேயும வரையறைப்படுத்திக் காப்பாற்றப் பொருத்தமான இலக்கணம் ஏற்படாத குறை.

2 எழுத்துக்களே ஒலிக்குத் தக்கவாறு முறைப்படுத்தி அவற்றிற்கேற்ற உருவங்கள் கொடாமையும் அவற்றின் தொகையை அறுதியிடாமையும்.

3 பேச்சொலிகளின் இயற்கை விதிகளேப் பின்பற்ருது பேசவியலாத ஒலிகளேச் சேர்த்தும் பிற மொழிச் சொற்களே வரையறையின்றிப் புகுத்தியும் மொழியை வளம்படுத்த மூயலுதல்.

4 பேச்சு நடைக்கும் இலக்கிய நடைக்கும் முயற்சிச் செட்டால் (Economy of Effort) ஏற்படும் வேற்றுமை பெரிதாகாதவாறு தடை செய்யாமை.

5 உயிரெழுத்து. மெய்யெழுத்து என்ற பிரிவினையுடைய மொழிகளில் இரண்டன் தொகையும் ஏறக்குறைய ஓரளவே இல்லாமல் மிக வேறுபட்டிருத்தல்.

ஒரு மொழி தோன்றிய காலத்திலிருந்து நூறாண்டு ஆயிரமாண்டு எனக் காலம் செல்லச் செல்ல மேற் காட்டப்பெற்ற காரணங்களால் மாற்றமடைந்து இறுதியில் பேச்சு வழக்கற்றுப் போகின்றது ; அல்லது வேறு மொழியாக மாறுகிறது. தமிழ் இத்தகைய சிக்கல்களிற்படாது தக்க அடிப்படையுடனும் இலக்கணப் பாதுகாப்புடனும் நிற்றலாற்றான் காலத்திற்கேற்ற புது வகை அணிகலன்களை அணிந்து தன்னை ஒப்பனை செய்து கொண்டு வரினும் குன்றா இளமையுடன் அன்ன நடை போட்டு வருகின்றது. இக்கட்டுரையின் இறுதியில் இதனை மேலும் விளக்கி முடிப்பாம் இனி ஆங்கிலம் வடமொழி இரண்டினையும் சோதித்து இவை வழக்கிழந்து மாறி வந்துள்ளமையை விளக்குவாம்.

மகா ஆல்பிரட் (Alfred the Great) காலத்தில் (கி. பி. 840) ஆங்கிலம் எழுத்துக் கூட்டிப் படிப்பதற்கேற்ற ஒலி வழுவிலாத மொழியாயிருந்தது. இதனைப் பழைய ஆங்கிலம் (Old English) என்பர். பின்னர் டேனர்கள் நார்மானியர்கள் படையெடுப்புக்களால் மொழி மிகமாறுதல் அடைந்தது. இதனை இடைக்கால ஆங்கிலம் (Middle English) என்பர் இக்காலத்தில் பழைய, ஆங்கிலம் செத்த மொழியாயிற்று. இதன் பின்னர்க் கிரேக்கம், இலத்தின், இக்கால பிரஞ்சு மொழிகளின் கலப்பால் இக்கால ஆங்கிலம் .(Modern English) உண்டாகியது. இக்காலத்தில் இடைக்கால ஆங்கிலமும் செத்த மொழியாயிற்று. ஆகலின் இக்கால ஆங்கிலேயர் பழைய இடைக்கால ஆங்கிலத்தைப் படிக்க வேண்டுமானல் அவற்றைப் பிறமொழிகளைக் கற்பது போலவே கற்கவேண்டும். சிலர் ஆங்கிலத்தை மூன்று பிரிவில் அடக்காது ஆறு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர் ஏனெனில் ஒவ்வொன்றிற்கும் அத்துணை வேற்றுமையுளது இம்மாற்றங்கள் சுமார் 1100 ஆண்டுகளில் ஏற்பட்டவை இக்கால ஆங்கில நெடுங் கணக்கில் (Alphabet). 5 உயிரெழுத்துக்களும்

21 மெய்யெழுத்துக்களும் உள்ளன இவற்றில் சில மெய் யெழுத்துக்களைத் தவிர ஏனைய எழுத்துக்களில் ஒன்றிற்காவது வரையறுக்கப்பெற்ற தனி ஒலி இன்மையாலும், உயிரைப்போல் மெய் நான்கு மடங்கு இருப்பதாலும் ஆங்கிலம் மிகக் குழப்ப மான ஒலி வேற்றுமைகளை உடையதாயிருக்கின்றது. நன்கு கற்ற ஆங்கிலேயரும் ஒரு சொல்லின் சரியான உச்சரிப்பை அறிந்து கொள்ள அகராதியைப் புரட்ட வேண்டியுள்ளது. அகராதிகளும் ஒலிக் குறியீடுகள் கொடுத்துள்ளன.

ஆங்கில மொழியின் இக்குழப்ப நிலையை நீக்குவதற்காகக் காலஞ்சென்ற பெரும் நாடகக் கவியாகிய பெர்நாட்ஷா (Bernadshaw) இப்போதுள்ள ஆங்கில நெடுங்கணக்கைப் பின் பற்றுவதால் ஏற்படும் ஏராளமான பொருள் இழப்பையும் வேண் டாத வீண் முயற்சியையும் புள்ளி விவரத்துடன் எடுத்து விளக் கியும் இதனைத் திருத்துவதால் உண்டாகும் நன்மைகளை விளக்கியும் ஆங்கில அரசுக்குத் திருத்தும் முயற்சியை மேற் கொள்ளுமாறு ஒரு விண்ணப்பம் கொடுத்தார். மேலும் இவரே ஆங்கில நெடுங் கணக்கிற்கு 16 உயிரெழுத்துக்களும், 24 மெய் யெழுத்துக்களும் வேண்டியிருக்கும் என்று வழிகாட்டினர். அரசு செவி சாய்க்கவில்லை. ஆதலின் தாமே இதனை முடிப்பதென முடிவு செய்து தம் நிறைந்த பொருளின் பெரும் பகுதியை இதற்காக ஒதுக்கி வைத்துத் தேர்ந்த அறிஞர்கள் அடங்கிய ஒரு குழுவையும், குழுவிற்குத் தலைவரையும் ஏற்பாடு செய்து ஒரு விருப்பச் சான்றிதழ் (Will) எழுதிப் பதிவு செய்து வைத் தார். இலண்டன் மாநகரில் உள்ள பொதுப் பொறுப்பாளர் (Public Trusty) இக்குழுவுக்குத் தலைவர் பெர்நாட்ஷா காலமாகி விட்டபடியால் இத்தலைவர் உலகின் பல நாடுகளிலும் உள்ள ஆங்கில அறிவாளிகளுக்கு இதற்குத் துணை செய்யும் திட்டம் வரைந்து அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்தார். இத்திட்ட ஏற்பாட்டில் யாமும் கலந்து கொண்டோம். எம்முடைய திட் டத்தின்படியொன்று இலண்டன் மாநகரில் உள்ள ஐசக்பிட்மான் (Isaac Pitman) நூல் நிலையத்தில் உள்ளது. திட்டம் நிறை வேற்றப்பட்டது பெர்நாட்ஷாவின் நாடகமொன்றும் புதிய எழுத்துக்களில் அச்சிடப்பெற்றது. நாடகம் எடுத்துக் கூட்டிப் படிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆனால் அரசு இதனைப் பின்பற்றவில்லை.

ஆங்கில மொழிமாத்திரமன்றி உலகின் மொழிகள் அனைத் தையும் ஒலி வழுவிலாமல் தமிழால் எழுதவியலும் என்பதைக்

குறித்து எடின்பரோ பல்கலைக் கழகத்தின் மொழியியல் துறை பேராசிரியர் டாக்டர் R. E. ஏஷர் அவர்களுக்கு (Dr. R E- Asher) ஓர் கடிதம் எழுதிக் கடிதத்துடன் யாம் ஆங்கிலத்தில் எழுதியுள்ள An Introduction to Universal Phonetics (ஒலி நூலின் முகவுரை) என்ற சிறு நூலையும் அனுப்பியிருந்தோம். அவர் நூலைப் படித்துப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்ததாக நன்றி செலுத்தி விடை எழுதியிருந்தார். விடையின் இறுதியில் "நீங்கள் ஓய்வு பெற்று இத்தனை யாண்டுகளுக்குப் பின்னரும் கல்வித் துறையில் இவ்வாறு தொடர்ந்து ஈடுபட்டு வருவதைக் கண்டு யான் மிக மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறே பயனுள்ள முயற்சிகளில் ஈடுபட்டு இன்னும் பல வாண்டுகள் நீங்கள் வாழ்ந்து வருமாறு வாழ்த்துகின்றேன்" என்று எழுதியுள்ளார்

"It is very pleasing to see that you are Continuing with your academic interests so long after your retirement. I should like to wish you many more years of fruitful endeavour"

தமது மொழியைப் பற்றி பெர்நாட்ஷாவின் போக்கு இவ்வாறிருக்கவும் நம் நாட்டில் உள்ள சில அறிஞர் (?) இந்திய மொழிகளை எல்லாம் ஆங்கில எழுத்துக்களைக் கொண்டு எழுதவேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர். ஐரோப்பிய மொழிகள் எல்லாம் ஏறக்குறைய இவ்விருபத்தாறு எழுத்துக்களால் எழுதப்படினும் இவை வெவ்வேறு மொழிகளாய்ப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வருவதற்குரிய காரணங்களை இவர்கள் கவனிப்பார்களாக

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்

என்றார் தெய்வப் புலவர்.

இனி வடமொழியின் வளர்ச்சியைப பற்றி ஆய்வாம். மொழியியல் நூலார் (Philologists) உலக மொழிகளைப் 14 பெரிய மொழிக் குடும்பங்களாகப் பிரித்துள்ளனர் இவற்றில் பல கிளை மொழிகளும் கிளைக்குக்கிளை மொழிகளும் காட்டப் பெற்றுள்ளன இவற்றில் பெரும்பாலன எழுத்தும் இலக்கியமும் இல்லாதன ஒவ்வொரு மொழிக் குடும்பத்திலும் செத்த மொழிகளின் எண்ணிக்கை காட்டப்பெற்றுள்ளது. தமிழ்க் குடும்பத்தில் காட்டப்பெற்ற 15 மொழிகளும் பேசப்படுகின்றனவாயினும் பலவற்றிற்கு எழுத்தும் இலக்கியமும் இல்லை. இந்திய

ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் உள்ள 8 பெருங் கிளைகளில் ஆரியம் ஒன்று. இதில் இரு பிரிவுகள் உண்டு. இவற்றில் ஒன்றுதான் வேத கால சமசுக்கிருதம். இந்த விவரங்கள் எல்லாம் New Standard Dictionary என்ற பேரகராதியில் Language என்ற தலைப்பில் கொடுக்கப்பெற்றுள்ளன. வேத காலத்தில் ஆரிய மக்கள் பிராகிருத மொழி பேசி வந்தனர் பிராகிருதம் என்ற சொல்லுக்கு எழுத்தேற்படா முன் வழங்கியது என்பது பொருள் வேதங்கள் எழுதப்படாமல் நீண்ட காலம் செவிவழி வழக்காய் வந்தமையால் பண்டைய தமிழ்ப் புலவர் இவற்றை எழுதா மறைகளெனவே சுட்டி வந்தனர். எழுதப்படாமல் வந்த வேதங்களின் பாடல்களுக்கு இலக்கணம் ஐந்திர மரபு என்பது. பாடல்களில் பெரும்பான்மை இந்திரனைப் பற்றியன வாகலின் இப்பெயர் உண்டாயிற்று. ஐந்திர மரபு எளிய இயற்கையான விதிகள் பொருந்தினவாயுள்ளன என்றும் மிகப் பிற்காலத்தில் எழுந்த பாணினீயம் செயற்கையான எளிதில் உணரலாகாத விதிகள் கூறுகின்றனவென்றும் பல அறிஞர் கூறியுள்ளனர். பல தமிழ்ச் சொற்கள் இருக்கு வேதத்தில் காணப்படுகின்றனவென்றும். தமிழ் வாக்கிய அமைப்பு முறையும் ஒலிப்பு முறை முதலியனவும் காணப்படுகின்றனவென்றும் Dr Taylor (Dr டெய்லர்) T. H. Rhys Davids (T. H ரிச் டேவிட்சு). S K Chatterji (S. K சாட்டர்சி) முதலியோர் கூறுகின்றனர். ஆகலின் இவ்வேதங்கள் மிகப் பிற்காலத்தில் மொகஞ்சதாரோ மக்கள் இனத்தவராய தமிழர் காலத்தில் எழுதப்பட்டனவாயிருக்கலாம் என்று ஊகிக்க இடனுண்டு

வடமொழி பிராகிருதமாயிருந்த காலத்தில் ஒலியெழுத்துக்கள் மிகக் குறைவாகவே இருந்திருக்க வேண்டும். சமக்கிருதம் ஆகிய பிறகு (பாணினி காலத்தில்) எழுத்துக்கள் மிகப் பல்கியிருக்கவேண்டும். மிக அண்மையில் ண, ள, என்ற தமிழ் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பொழுது இம் மொழி நெடுங்கணக்கில் 10 உயிரெழுத்துக்களும் 33 மெய்யெழுத்துக்களும் உள்ளன, உயிர் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ள ர் (உ) ர் (ஊ), ல் (உ). ல் (ஊ) இவை நான்கும் அரையளவு. முழு அளவு ஏறிய குற்றியலுகரங்களாகும். இவற்றிலும் முழு அளவு 'ல்' மிக அண்மையில் சேர்க்கப்பட்டுள்ள எழுத்தாகும். மெய் வரிசையில் (க, ச, ட த ப) காட்டப்பெற்றுள்ள நான்காம் எழுத்துக்கள் எளிதில் பேச்சில் உச்சரிக்கக் கூடியன அல்ல. தமிழில் வல்லெழுத்தாறிற்கும் — தனித்தனி இன எழுத்

துக்கள் (மெல்லினம்) உள்ளன. ஆனால் வடமொழியில் நந் நான்கு எழுத்துக்களுக்கும் ஓர் இன எழுத்தே உள்ளது. மேலும் உயிர் எழுத்துக்களைப் போல் மும்மடங்கு மெய்யெழுத் துக்கள் உள்ளன ஆகலின் உயிர்மெய்யெழுத்துக்கள் மிக அதிகமாயும் இவற்றை எழுதுவதற்குத் தனி உருவங்களேயன்றிப் பலப்பல கூட்டுருவங்கள் வேண்டுவனவாயும் உள்ளன. இத் தகைய காரணங்களால் சமசுக்கிருதத்தை ஒலி வழுவிலாது பேச்சு வழக்கிற்குக் கொண்டு வருவது இயலாது. பேசமுயன் ருல் பெரும் மூச்சுத் திணறல் உண்டாகும். சமசுக்கிருதம், இலக்கியத்திற்கே பயன்படும்; பேச்சிற்குப் பயன்படாது. ஆகஃச்டு — 9இல் சென்னை மயிலாப்பூரில் சமசுக்கிருத நாள் விழாக் கொண்டாடப்பெற்றது. இதற்கு நம் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார் இச் செய்தியில் ஒரு வாக்கியம் கீழ்வருமாறு: (The Hindu - Page - 14 - August - 10) "It is unfortunate that Sanskrit which has preserved an uninterrepted flow of of our culture is considered a "dead language" இதன் பொருள்: "நம்முடைய கலைகளையும் ஒழுக்க வழக்கங்களையும் பாதுகாத்துத் தங்குதடையின்றி இதுவரையும் கொண்டுவந் துள்ள சமசுக்கிருதம் செத்த மொழியென்று கருதப்படுவது துரதிட்டமே ஆகும்" சமசுக்கிருதத்தில் கலைகளும் நீதிகள் நிறைந்த பெருங்காப்பியங்களும்-வேதங்களும், உபநிடதங்களும் உள்ளன என்பதனை யாரே மறுக்க வல்லார். ஆனால் பிரதமரைப் போல் அது பேச்சு வழக்கற்ற மொழியாயிருக்கின்றதே என நாமும் வருந்துகிறோம்

இனி நந்தமிழ் மொழியைக் குறித்து ஆய்வாம். தமிழில் 12 உயிர்களும் 18 மெய்களும் உள்ளன மூன்று சார்பெழுத் துக்களும் உள்ளன மெல்லெழுத்தாறும் வல்லின எழுத்துக் களுக்கு இன எழுத்துக்களாயிருப்பதனால் ஒருவகையில் மெய் பன்னிரண்டெனக் கொள்ளுதலும் சாலும். ஏனெனில் ஆசிரி யர் தொல்காப்பியனார்

மெல்லெழுத்தாறும் பிறப்பின் ஆக்கம்
சொல்லிய பள்ளி நிலையின வாயினும்
மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்

எனக் கூறியுள்ளார். வடமொழி ஆங்கிலம், போலன்றித் தமி ழில் உயிரோ உயிர்மெய்யோ தான் சொற்களைத் தொடங்கும்.

திருநெல்வேலியும். கோயம்புத்தூரும். தஞ்சையும். சென்னையும் பேச்சொலிகளில் சிறிது மாறுபடினும் எழுத்தில் ஒன்றேயாம். தமிழை இலக்கண விதிப்படி பேசினாலும் மூச்சுத் திணறல் உண்டாகாது. அகத்தியர் காலத்திற்கு முன் தோன்றிய தமிழ் எழுத்தெண்ணிக்கை இன்று வரையில் குறையாதும் கூடாதும் இருந்து வருவதே தமிழின் இளமைக்குத்தக்க சான்றாகும். மிகப் பிற்காலத்தில் சேர்க்கப்பெற்றுள்ள ஜ. ஸ. ஷ ஒலிகள் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியவையே ஆசிரியர் தொல்காப்பியனார் இவ்வொலிகள் தமிழிற் புகாவண்ணம் தடுப்பதற்கே

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

என்ற நூற்பாவை இயற்றி வைத்தார் 'வடவெழுத்தொரீஇ' என்ற தொடருக்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள உரை நோக்கற்குரியது :

'உரப்பியும், எடுத்தும், கனைத்தும் கூறும்
வடவெழுத்துக்களின் நீக்கி.'

இக்காலத்தில் பொருள் நசையால் சில வார, திங்கள் இதழ்கள் வேண்டுமென்றே ஆங்கிலச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் கலந்து எழுதித் தமிழைக் குலைப்பது பெரிதும் வருந்தத்தக்கது. அண்மையில் பிரஞ்சு நாட்டுத் தலைவர் (President) பிரஞ்சு மொழியில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுத வேண்டாமென்று தம் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருப்பது நோக்கத்தக்கது.

'எழுத்தெனப்படுப
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப:
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே'

என்ற நூற்பாவை இக்கால ஐயாட்டைத் தமிழ்க் குழந்தையும் ஒலி வழுவிலாது படிக்குமன்றோ? ஆகலின் மொழியின் நோக்கம் ஒருவர்க்கொருவர் கருத்தைப் பரிமாறிக்கொள்ள உதவுவதுடன் நில்லாது (Vehicle of thought) பழைய கருத்துக் கருவூலங்

களைப் பாதுகாப்பதாக இருத்தல் வேண்டும். இவ்வடிப் படைக் கொள்கை தமிழ் மொழிக்கே உண்டு.

டாக்டர் கால்டுவெல் கீழ்வருமாறு கூறியுள்ளார்: "வட மொழிச் சொற்களின் பெரும் பகுதியை அல்லது முழுமையையும் நீக்கிவிட்டுத் தமிழ் மிகத்தூய்மையான. அழகான நடையை அடையக்கூடிய ஆற்றல் உள்ளது"

"Tamil can readily dispense with the greater part of the whole of its Sanskrit and by dispensing with it rise to a purer and more refined style"

Rev. Persival (பெர்சிவல்) பாதிரியார் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

'சுருக்கி விளக்கி ஒரு கருத்தை மனதில் ஆழமாகப் பதிய வைக்கக்கூடிய ஆற்றல் தமிழுக்கிருப்பது போல் வேறெம் மொழிக்கும் இல்லை. இவ்வாறே ஒருவர் உள்ளக்கிடக்கையை உள்ளவாறே மிக நுட்பமாக வெளிப்படுத்தும் ஆற்றல் உள்ள நடை தமிழுக்கு இருப்பது போல் உலகில் வேறு எம்மொழிக்கும் இல்லை" என்று உறுதியாகக் கூறலாம்.

'No language combines greater force wlth equal brevity than Tamil and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than Tamil."

சித்திரை இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B. A., B. L, தஞ்சை.

வீடு பேறுறுதலுக்கு, உயிர் தன்னை ஈடேற்றிக்கொள்ள தமக்குரிய இயல்பாய அறிவு இச்சை செயல் எனும் முப்பண்புகளைச் சிறந்த கருவிகளாகப் பயன்படுத்திக்கொள்ளல் வேண்டுமென்பது வள்ளுவரது சீரிய கருத்தாகும். இதன் வழி இறைவனை உயிர்கள் அன்பால் சார்ந்து. அறிவால் வேண்டி இடைவிடாது பாவித்தும் ஆற்றலால் பற்றி இருத்தலும் வேண்டுமென்பது அறியப்படலாயிற்று இவ்வறிவு முதலிய சிறப்பியல்களை, முயற்சிக்குரிய துறைகளாகக் கொண்டு, ஒரு படித்தாய் இறையினை நாடி நிற்கச் செய்து, உயிர்வழிபாடாற்றின். வீடு பேறுறும் நிலை எளிதே அதற்குத் தெள்ளத் தெளிய புலனாகும். அறிவு இச்சை, செயல் ஆகிய இம்மூன்றும் உயிரின் பண்புகளாகிய அன்பு அறிவு ஆற்றல் வழி இறையருட்டுணையுடன் இயைந்து இயங்கி வீடு பேற்றின்கண் செயல்படவேண்டும். அதுபோதுதான் பொறி புலன்களும் மனமும். ஆத்மபோதத்தில் ஒன்றிக் கலக்கும் வல்லமை பெறவே இறைவன் உயிர்களோடு அன்பின் கலப்பால் ஒன்ருய். அறிவின் தன்மையால் வேருய். ஆற்றலின் வழி உயிர்க்குயிராகும் தன்மையால் உடனாய் என்றும் அமர்ந்திருப்பான்,

அறிவாதி மூன்றும் இறைவயத்தாய் ஒழுகும் நெறியே வீடு பேறு தரும் நெறியென வள்ளுவர். தம் கடவுள் வாழ்த்தில் வழிகாட்டிக் கூறியது சிந்தித்துணரற்பாலது. 'வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்தல்' உயிர்க்குரிய வழியென வள்ளுவர் காட்டியதில், ஆசிரியர் பரிமேலழகர் 'அடி சேர்தல' என்பதற்கு திருவடியை இடை விடாது நினைத்தல் என உரைகண்டு, அறிவின் உறுதிப்பாட்டால் இறைவனை அடையும் அருநிலையினை எய்துதலை ஒரு தலையாக உணர்த்தியுள்ளார். இறைவனையடையும் நிலையினை அறிவாலறிந்த ஞான்று, அதனைப் பெறுமாறு இச்சை தோன்றுவது உயிர்க்கியல்பாகிய பண்பென வள்ளுவர். 'இருள் சேரிருவினை' என்ற குறட்பாவில் வலியுறுத்தி இறைவன் பொருள் சேர்ந்த புகழைப் புரிதல் நிலையே வழிபாட்டுக்குரியது என்று அருளியுள்ளார். 'புரிதல்' என்பது விருப்பி நினைத்தல் ஆதலின், அவ்விருப்பத்தை இறைவனது

மெய்ம்மை சேர்ந்த புகழின் பால் செல்லவிட்டு இடைவிடாது வாழ்த்துதலைச் செய்தலை அச்சொல் குறிக்கும். இதன்வழி, உயிரின் பண்பாம் இச்சையும் அன்பின் விழைவும் இறைவழி பாட்டுக்கு உதவும் நிலையாக உணர்த்தப்பட்டுள்ளது காண்க. இவ்வாறு அறிந்து விழைந்த பின்னரும், விரும்பிய பொருளைப் பெறற்கு முயலும் செய்கை இன்றியமையாததினுன், அச்செய லாகிய உயிர்ப் பண்பினை பொறிவாயில்' என்ற குறளினுள்ள 'பொய்தீர் ஒழுக்க நெறி நிற்றல்' எனும் தொடரான் வள்ளுவர் உளங்கொள வைத்தார். பொய்தீர் ஒழுக்க நெறியால் ஐந்த வித்த பொறிகளையுடைய அருள்யாக்கையிற்றங்கும் உயிர் ஒலி விட்டுப் பொலிய, உடலும் இறை விளக்கமுறுமாதலால் இத் தகையர யர்க்கின்கண் இறை சிறப்பாக வீற்றிருந்தவாறே மெய் யுணர்த்தி வீடுபேறு நல்குவன் என்பதை வள்ளுவர் உறுதி காட்டி அருள்வாராயினுர்

இதனுல் உயிர் பொய்தீர் ஒழுக்க நெறியிலே நடந்தால், நெடிது வாழ்ந்து இறைவனது திருவடியினை யடையலாமென்பது உன்னத்தக்கது. ஆகவே மனம் மொழி மெய்கள் கொண்டு அறிவாதி மூன்று பண்புகளையும் வாழ்வில கடைப்பிடித்து இறை பால் சிதற விடாது செலுத்தி மெய்யுணர்வோடு ஒழுகுதல் வீடு பேறடையும் செந்நெறியென்பது துணிபாயிற்று. மெய்யுணர் வால் வீடுண்டாம் என்பதை வள்ளுவர் மெய்யுணர்தலாகிய காரியத்தை வீடு பயத்தலென்னும் காரியமாக ஏற்றிக் கூறியது கண்டு கொள்க

தன்னையும் தன் தலைவனையும் காண்டலே மெய்யுணர்தல். மெய்யுணர்தலென்றும் தலைவனருளைப் பெற்றவழி மெய்யுணர்வு மேதக்க பயன்தரும். மக்களுயிர்கள பொதுவாக ஐப்புலன்கள் வழி உலகினை அறியுமேயல்லாது தன்னையும் தன் தலைவனையும் அறியாது புலனை வெல்லும் வழியில் செலுத்துபவன் இறை வனுதலால, அவனருளாலே பொறியும் நன்மைக்குத் துணை யாகுமென்பதை வள்ளுவர் குறிப்பாகக் கூறி, உயிருக்குத் தோன் ருத் துணையாயிருப்பது அவ்விறைவனே என்பதையும் விளக்கி யுள்ளார். சிறு நெறிகளோடு சேராது இறையருளைச்சாரு தலே, உள்பொருள் உணர்தலாகும், உள்ளது உணர்தலென் பது பதியினை விளக்கி பிறப்பினை அறுக்கும் பதிஞானமாகும். இதனை கருத்துடன் ஓர்ந்துணர்ந்தால் பாசமாம் பிறப்பு நீங்கி ஒழியும் என்பது வள்ளுவர் உள்ளம், தன்னையும் தன் தலைவனை யும், ஏனைய எண்ணற்ற உயிர்களையும், வேறொருவர், தன்

ஆத்ம சிந்தனையாலும் சாதனையாலும், போற்றுகிருரோ, அவர் தாம் ஒத்தது அறிவார் எனப்படுவர் ஒத்தது அறிவார் உயிர் வாழ்வாரென்றும் (214) அன்னவரே இறைவனை அறிந்தவ ராய் இறைவனது திருவடிப் பேற்றினைப் பெறற்குரியர் என வள்ளுவர் கூறியுள்ளார் மற்றும் தன் தலைவனை மறப்பவர் முறை தவறி உவந்து துன்புறுவரென்பதை 'மறப்பின் எவன் ஆவன் மன்கொல்?' (207) எனவும் மொழிவாராயினர். நோற்றலில் ஒத்தது அறிவாரது ஆற்றல் தலைப்பட்டால் கூற் றம் குதித்தலும் கைகூடும் என்பது திருவள்ளுவரது அனுபவம், இதனுற்ருன், கற்றும். கேட்கும் சிந்தித்துத் தெளிந்தும். ஐயத் தினின்று நீங்கி மெய்ப்பொருளை உணர்ந்தாருக்கு, தாமிருக்கும் வையகத்தினும், அடையக் கடவதாகிய வீட்டுலகம் அன்மை யிலுளதாதலை

ஐயத்தின்நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வாணம் நணிய துடைத்து

என வள்ளுவர் உணர்த்துவாராயினர். வீடுபெறும் நிலையே மக்களுயிர்க்கு உரித்தாயுள்ள தென்பதை

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு

என வள்ளுவர் தன் குறட் பெட்டகத்தில் இருத்தித் தெளி வுறுத்தி. நோய்களுக்கு இருப்பிடமாகிய உடலில் குடியிருந்து நீங்கும் உயிருக்கு என்றும் நீங்காமல் இருத்தற்குரிய வீடு இது காறும் அமையவில்லை போலும் என்று வியந்த நயம் அறிந்து இன்புறற்பாலது

இத்தகைய ஒப்பிலா வீட்டியலின் உண்மையினையும் வீடு பெறும் எழிலினையும், மெய் வாழ்வில் நிற்கும் வள்ளுவனுர். மூப்பால் வாயிலாக புலனுகுமாறு சிற்சில குறட்பாக்களானும். உரனுடைய சொற்றெடர்களானும், ஊற்றமாய சொற்களானும் பரவலாக விளங்க வைத்து, வாழுமுயிர்கள் மெய்யுணர்வின்பம் கைவரப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ, உலகியலை அறத்தின் மேலேற்றித் தம் குறணூலில் மிகுதியாக உணர வைத்துள்ளார்.

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி

பெயரின் ஆகிய தொகை

டாக்டர் மோ. இசரயேல்
துணைத் தமிழ்ப் பேராசிரியர், மதுரைப் பல்கலைக் கழகம்.

பெயர்த்தொகை

இளம்பூரணர் அறுவகைத் தொகைச் சொல்லும் பயனிலை ஏற்கும் என்கின்றார். தொல்காப்பியனார் அறுவகைத் தொகைகளுக்கு எச்சவியலில் இலக்கணம் தருகின்றார். இங்கு அவற்றையே 'பெயரினாகிய தொகை' என்ற பெயரால் சுட்டுகின்றார் எனலாம் தொல்காப்பியனார் கூறியுள்ள அறுவகைத் தொகைச் சொற்களும் பெயர்த் தொகைகளே (Nominal Compounds). அவை எல்லாம் பெயர்த் தலைகளை யுடையவைகளே (Nominal heads) மேலும் அவை தனிப் பெயர்களைப் போன்ற புறநிலை வழக்குடையன. இலக்கண நூலார் கூறும் எல்லாத் தொகைகளும் தனிப் பெயர்களைப் போன்ற புறநிலை வழக்குடைமையான் பெயரினாகிய தொகை என்னும் தொடரால் பெயரைப் போன்ற புறநிலை வழக்குடைய தொகைச் சொற்கள் எல்லாவற்றையும் அவர் கருதினார் என்பதில் தவறில்லை.

இன்னின் பொருள்

பெயரின் ஆகிய தொகை என்ற சொற்றொடரில் அமைந்துள்ள 'இன்' உருபு 5ஆம் வேற்றுமைப்பொருளில் வந்துள்ளது. ஒப்புப் பொருளினதாகக் கொள்ளுதலே சாலப் பொருந்தும். (தொ. சொ. 77. 78)

குழவி கொள்பவரின் ஓம்புமதி (புறம். 5). விறலியிற் றோன்றும் (அகம் 82-10) என்ற தொடர்களில் அமைந்த பொருளை ஒத்தது எனலாம் 'இன்' என்ற உருபினை இவண் உரையாசிரியர்கள் கருவிப் பொருளினதாகக் (3-ஆம் வேற்றுமை) கொண்டமையாலேயே பெயரினாகிய தொகை என்ற தொடருக்குத் தொகையின் உள்ளமைப்பு பற்றிய விளக்கம் தரமுற்பட்டனர்.

இளம்பூரணர்

அறுவகைத் தொகைச் சொற்களும் எழுவாய் வேற்றுமை யாதலைச் சுட்டிய இளம்பூரணர், பெயரும் பெயருந் தொக்கு எழுவாயாதலைக் குறித்து உம்மையான் வினையும்[1] பெயருந் தொக்க தொகையும் செய்குன்று ஆடரங்கு போன்றனவும் (வினைத்தொகைகளும்) பயனிலைப்பாடு பிழையாது வரும் என்கின்றார். வேற்றுமையியலில் தொல்காப்பியனார்க்குத் தொகைச் சொற்களின் உள்ளமைப்பினை பகுத்துக் காட்டும் நோக்கம் இல்லை. அவை எழுவாயாக நின்று பயனிலை ஏற்றலைக் காட்டுதலே அவர் கருத்து. எனவே இளம்பூரணர் விளக்கம் ஏற்றற் குரியதன்று.

சேனவரையர், நச்சினர்க்கினியர்

இவ்விரு உரையாசிரியர்களும் நிலங்கடந்தான் மாக் கொணர்ந்தான், குன்றத்திருந்தான் போன்றவற்றைப் பெயரும் வினையும் தொக்க தொகைக்கு எடுத்துக் காட்டுகளாகத் தந்துள்ளனர். எழுத்ததிகாரத்தில் 'பெயருந் தொழிலும் பிரிந் தொருங் கிசைப்ப வேற்றுமை உருபு நிலைபெறு வழியும் தோற்றம் வேண்டாத் தொகுதிக்கண்ணும்' (தொ. எழு 132) என்றமையான் வேற்றுமை யுருபு தொகப் பெயருந் தொழிலும் ஒருங்கிசைத்தலும் தொகையெனவே படும் எனச் சேனவரையர் வலியுறுத்துகின்றார். நச்சினர்க்கினியர் பெயரொடு வினை தொக்கன எழுவாயாய்ப் பயனிலை கொள்ளாது என்று கூறினும் 'பெயரினாகிய தொகையும்' என்றதனால் 'தொகை இருவகைய' என்று கூறினர்.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் தொல்காப்பிய உருபு தொகுதலைச் சுட்டியுள்ளாரே யன்றி, சொற்கள் இணைந்து நின்று ஒருசொன்னடையவாய் வருதலைக் கூறவில்லை. மேலும் தொல்காப்பியனார்க்கு வேற்றுமையியலில் தொகைச் சொற்கள் இருவகையின என்பதை விளக்கும் நோக்கமும் இன்று. தொகைச் சொற்கள் எழுவாயாதலைக் குறிப்பிடுதலே அவர் குறிக் கோள். இதனைத் தெளிவுபடுத்த இன்னும் சில விளக்கங்களைத் தருதல் இயலும்.

1. தொல்காப்பியனார் எந்த இடத்திலும் பெயரும் வினையும் இணைந்து தொகைச் சொல்லாக வரும் என்று சொல்லவில்லை.

2. தொல்காப்பியனுர் எல்லாத் தொகையும் ஒரு சொன்ன டைய (தொ. சொ. 420) என்கின்ருர். ஆனல் பெயரும் வினை யும் தொக்கன ஒரு சொன்னீர்மையிலவாகலிற் ருெகை யெனப்படா.

3. தொல்காப்பியனுர் தரும் தொகைச் சொற்களில் எல்லாம் உறுப்புக்கள் அடை—தலை என்ற தொடர்பில் அன்றேல் இணை நிலை அமைப்பில் நிற்பன. ஆனல் நிலங்கடந்தான், மனக் கொணர்ந்தான் ஆகியவற்றில் உறுப்புக்கள் செயப்படுபொருள் — பயனிலைத் தொடர்பில் நிற்பன.

எ—டு. கொல்களிறு கபிலபரணர்
பாற்குடம் புலிவிற்கெண்டை
கருங்குதிரை
பொற்ருெடி
பவளவாய்

4. நிலங்கடந்தான். மாக்கொணர்ந்தான் ஆகியவற்றில் உள்ள வருமொழிகளை இளம்பூரணர் கருத்துக்கிணங்க வினை யாலணையும் பெயர்களாகக் கொண்டாலும் அவற்றின் உறுப்புக் கள் அடை—தலை என்ற தொடர்பில் அமைதல் இல்லை. நிலை மொழி செயப்படு பொருள் தொடர்பில்தான் நிற்கின்றது.

5. தொகை என்ற சொற்கு இரு பொருள்கள் உள. ஒன்று (சொற்கள்) இணைந்து வருதல்; இன்னென்று (உருபு) மறைந்து வருதல். தொல்காப்பியனுர் தொகைக்குச் சொற்கள் இணைந்து வருதலையே சிறப்புடைமையாகக் கருதுகின்ருர். 'ஒரு சொன்னடைய' (தொ சொ. 420), வேற்றுமைத் தொகையே வேற்றுமையியல (தொ. சொ. 413), உவமத் தொகையே உவம இயல (தொ சொ. 414), வினையின் தொகுதி காலத்தியலும் (தொ. சொ. 415) எனக் கூறுவனவெல்லாம் இதனை வலியுறுத்துகின்றன. [2]

6. சேனுவரையர் கருத்திற்கிணங்க, பெயரும் வினையும் இணைந்து வந்தால், அது தொகைச் சொல்லாக வராமல் சொற்ருெடராக அமைந்து இரண்டு உறுப்புக்களும் இணைந்து எழுவாயாக வருதல் இயலாது.

எனவே நிலங்கடந்தான், மாக்கொணர்ந்தான் போன்றவற்றைத் தொகைச்சொற்கள் என்று கொள்ளுதல் இயலாது. [3]

பெயரின் ஆகிய தொகை என்பது பெயரான் ஆகிய தொகையன்று; பெயரைப் போன்று (வழக்கில்) அமைந்த தொகையாகும்; பெயர்த் தொகையாகும். அதாவது பெயர்த் தலைவினையுடையதாய் ஒரு சொன்னடைத்தாய் பெயரைப் போன்ற புறநிலை வழக்கினையுடையது இலக்கண நூலார் கூறும் வினைத் தொகையும் இதனுள் அடங்கும். தமிழ் இலக்கண நூலார் கூறும் எல்லாத் தொகைகளும் பெயர்த் தொகைகளே (Nominal Compounds) அவை யாவும் தனிப் பெயரைப் போன்று எழுவாயாக நின்று பயனிலை கொள்ளுவனவாம்.

குறிப்புக்கள்

1. சேனாவரையர், தொல். சொல். 415 உரை,

   வினைத்தொகையில் வினையென்றது — 'வினைச்சொற்கும் வினைப் பெயர்க்கும் முதனிலையாய், உண், தின், செல், கொல், என வினை மாத்திர முணர்த்தி நிற்பனவற்றை 'யென்று கூறி, இறுதியில்' தொழில் மாத்திர முணர்த்துவன வெல்லாம் தொழிற்பெயரென்பது ஆசிரியர் கருத்து என்று முடிக்கின்றார்,

2. நன். 361, 363 — 368.

3. Israel, M, The Treatment of Morphology in Tolkappiyam. pp. 319,320

அண்ணாமலைப் பல்கலைக் கழக இலக்கியச் சொற்பொழிவுகள்

(செய்தி — டாக்டர். வ. சுப. மாணிக்கம்)

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையினர் இலக்கியச் சுற்று என்றவொரு சொற்பொழிவு வட்டத்தை இவ்வாண்டு தொடங்கியிருக்கின்றனர். தமிழுக்குத் தொண்டு செய்த இலக்கியப் பெருமக்களைப் பற்றி இத்தொடர் சொற்பொழிவுகள் திங்கள் தோறும் நடைபெறும். இலக்கியச் சுற்றின் முதற் சொற்பொழிவுகள் 3—8—76, ஆளவை மன்றத்தில் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் தம் ஆசிரியப் பெருந்தகையான தமிழ்த் தந்தை உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் உழைப்பு. மாணவர்கள் மேல் கொண்ட பற்று, தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் போற்றிய பண்பு என்பன பற்றிய பல புதிய வாழ்க்கைக் குறிப்புக்களை எடுத்துக் கூறினர். திரு அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைக் காப்பியம் படைத்த சாத்தனாரின் பாத்திரப் படைப்பு, சமய நோக்கம் என்றிவற்றை மேல்நாட்டுக் காப்பியங்களோடு ஒப்பிட்டுக் காட்டினார். தலைவர், தம் முடிவுரையில், டாக்டர் உ. வே. சா வின் என்றும் மறக்க இயலா அடிப்படைத் தொண்டுகளையும், சாத்தனாரின் நிலையான சீர்திருத்த இயக்கங்களையும் புலப்படுத்தினார். திரு வெ செயராமன் நன்றி கூறினார். இக்கூட்டத்திற்குப் பல்துறை மாணவர்களும் இலக்கிய அன்பர்களும் திரளாக வந்திருந்தனர்.

பரதரும் பரதவரும்

பேராசிரியர், சி கோ. தெய்வநாயகம்.
எம். ஏ. பி. எசி டிப்-இன்-அக்ரி சர்டிபிகேட்-இன்-ஆர்க்.

தமிழ இலக்கியங்களில் பரதர், பரதவர் என்னும் இரு இனப் பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் பரதர் என்பதற்கு "செட்டிகள்" எனவும், பரதவர் என்பதற்கு "தென்றிசைக்கண்" ஆண்ட ஒருசார் குறுநில மன்னர், நுளையர் எனவும் மர்ரே பதிப்பு—பாட்டும் தொகையும் பொருள் காட்டுகின்றது பல அறிஞர்களும் இக்கருத்தின் வழிச் செல்கின்றனர். பரதர் என்னும் இனம் உயர்தொழிலைச் செய்த இனமாகவும், பரதவர் என்னும் இனம் "மீன் பிடித்தல்" தொழிலைச் செய்துவந்த இனமாகவும், அன்னோர் கூறுகின்றனர். இக்கட்டுரை இவ்விரு பெயர்களும் ஒரு இனத்தைக் குறிப்பிடுவதோடு — சார்ந்த தொழில் அடிப்படையில் ஒரு பொருளதாகுமெனக் குறிப்பதாகும்.

"மீன்விலைப் பரதவர்" (சில. இந் 25)

எனக் குறிப்பிடப்பட்ட பரதவர்களே அதற்கான படகு, வலை போன்றவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆயின் பரதரும் அக்கருவிகளைப் பெற்றிருந்தமையினை,

1. சேரிப் பரதர் வலை முன்றில் — (சில கானல் 38)

2 நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை, கடல்பாடு அழிய இடைமீன் முகந்து, துணை புணர் உவகையர் பரத மாக்கள் (அகம் 30 பாடல்)

3. எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர் (அகம் 340) போன்ற இலக்கியச் சான்றுகள் வலியுறுத்துகின்றன அதனால் பரதர், பரதவர் என இலக்கியங்களில் குறிக்கப்படுகின்ற இனப் பெயர்கள் ஒன்றே எனபது பெறப்படுகின்றது இப்பரதவருள்ளே செல்வநிலைக்கேற்ப தகுதியும், புகழும் வாய்ந்தவர்களாக பெரும்பான்மையினர் விளங்கினர் இவர்கள் தமக்கெனக் கொண்ட குறுநில ஆட்சியினையும், ஆட்சித் தலைவனையும் கொண்டு விளங்கினர் என்பதனை

"வல்வில் எறுழ்த்தோள் பரதவர் கோமான்
பல்வேள் மத்தி" — (அகம் 226)

எனும் அகநானூற்றுச் சான்று நிலை நிறுத்துகின்றது.

இக்குறுநில பரத மாக்கள் பேரரசிற்குட்பட்டு வாழ்ந்த மையினையும், அவர்கள் அரச இனத்தோடு ஒருங்கு மதிக்கப் பெற்ற நிலையினையும்

1. " அரைசுவிழை திருவிற் பரதர் மலிந்த பயங்கெழு மாநகர் " எனும் சான்று விளக்கும். (— சில, மனை, 2)

தந்தொழிலீட்டத்தால் அரசர்களே கண்டு ஆசையுறுமாறு படைத்து வைத்த பெருஞ் செல்வர்களால் பரதர் நிறைந்து வாழ்ந்த மாநகராதலின் புகார் நகரம் " பயங்கெழு " விய நன்னகராக, செல்வநகராக விளங்கிற்று

இந்திர விழாவினைக் கொண்டாட சோழ அரச குடியினர், சென்றபோழ்து அவரோடு ஒருங்கே பரத குமரரும் இணைந்தே செல்கின்றனர். இதனை

அரச குமரரும் பரத குமரரும்
கவர் பரிப்புரவியர் களிற்றின் தொகுதியர்
— (சிலம் இந் 158)

எனும் பகுதி விளக்குகின்றது

இவ்வாறு இப்பரதரினம் பெருஞ்சிறப்புப் பெறக்காரணம் அவர்களது செல்வ நிலையேயாம் வெறும் மீன் தொழிலினால் பெரும்பொருளீட்ட முடியாது. எனவே இவர்கள் வேறு பெருஞ் செல்வந் தரும் தொழில்களையும் செய்திருத்தல் வேண்டும். அத்தொழில்கள் யாவை ? கீழ்க்காண்போம்.

பெருநீர்ப் பரப்பிற்கு அண்மையில் அப்பெருநீர்ப் பரவையாம் கடலையே வாழ்வியலடிப் படையாக் கொண்டு வாழ்ந்த நெய்தல் நில மக்களே நுளையர் எனும் பரதவராக வழங்கப் பெற்றனர். அவர்கட்கு கடலே வாழ்க்கையாக அமைந்த தெனலாம். இவர்களை " கடலவாழ்நர் " (சிலம்—கானல் 12) என சிலம்பு குறிக்கின்றது. ஏன் இவர்கள் கடலைச் சார்ந்து வாழ வேண்டும்? மீன பிடிப்பதற்காக அன்றோ? இதனை

1. " கடல் புக்கு உயிர்கொன்று வாழ்வர் " —(சிலம். கானல்17)
2. பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கல் (குறுந். 320)
3. கடல்பாடு அழிய இடைமீன் முகந்து
துணைபுணர் உவகையர் பரத மாக்கள் — (அகம்—30)
4. பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர் -(அகம் 140)

5 .... வே'டெழுந்த நயனில் பரதவர்
வைகு கடல்" — (அகம் — 187)

6. இருநீர்ப் பரப்பின் பனித்துறைப் பரதவர் (அகம்—366)

7. "கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ" (ப-பத்து 48)

8 கடலுள் பரதவர் — (கலி 106 : 25)

என்னும் இலக்கியச் சான்றுகள் வலியுறுத்துகின்றன.

மீன் வேட்டம் பொருட்டு கடலுள் சென்று வந்தவர் பரதவராவர். அவ்வாறு கடலுட் சென்று, வர மிதவை வேண்டுமே? மிதவைகள் அம்மக்களின் விருப்பிற்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்ப பெரிதாயும், சிறிதாயும்; அழகியதாயும் விளங்கினவாம்.

1. திமில் வாழ்நர் — (சிலம்பு — கானல் 11)

2. "ஓடுந் திமில் கொண்டு உயிர்கொல்வர்"
— (சிலம். கானல் 19)

3. "திண்டிமில் வன்பரதர்" — (புறம் 24)

4. கொடுந்திமிற் பரதவர் — (குறுந் — 304)

5 மீன்கொள் பரதவர் கொடுந்திமில் — (அகம் 65)

6. கொடுந்திமில் பரதவர் வேட்டம்" — (அகம்—140)

7. 'பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்"
(மதுரைக்காஞ்சி 319)

என்ற சங்க இலக்கியச் சான்றுகள் 'திமில்' என்னும் சிறுவகைப் படகைப் பற்றியே பெரும்பான்மை பேசுகிறது ஆனால்

1. கடலுள் பரதவர் அம்பி ஊர்ந்தாங்கு (கலி 105 : 25)

2. பரதவர் வைகுகடல் அம்பியின் தோன்றும் (அகம். 187)

எனும் சான்றுகள் சற்றே பெரும் படகுகளாகவும். அழகிய வேலைப் பாடமைந்தனவாகவும் விளங்குகின்ற. கம்ப இராமாயணத்தில் குகப்படலத்தில் கூறப்படுகின்ற பரிமுக அம்பி, கரிமுக அம்பி போன்ற "அம்பி" எனும் அழகிய பெரும் படகுகளையும் அப்பரதவர் உடையராய் இருந்தனர் என்பதனை விளக்குகின்றது.

மீன் வேட்டத்திற்கு வலை வேண்டும். அவ்வலையினைப் பற்றி

1. வலை வாழ்நர் (சிலம். கானல் 10)

2. கொடுங்கண் வலை (சிலம்பு — கானல் 18)

3. சேரிப்பரதர் வலைமுன்றில் (சிலம்பு கானல் 38)
4 நுண்வலைப் பரதவர் (குறுந் 184)
5. நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பாடு அழிய இடைமீன் முகந்து (அகம் 30)
6 நாள் வலை முகந்த கோள்வல் பரதவர் (அகம் 300)

என்பன போன்ற சான்றுகள் விளக்கி அப்பரதர் நெடுங் கயிற்றோடு பிணைத்த கொடுங்கண் பெருவலைகளை வைத்திருந்த மையை குறிக்கின்றன.

திமிலும், வலையுமிருந்தாற் போதுமா? கடலுட் செல்ல, திமிலைச் செலுத்த வேண்டுமே! இப்பரதவர்களே அவற்றை கடலுட் செலுத்திச் சென்றிருத்தல் வேண்டும். எனவே இவர்கள் அலைகடலுட் புணை செலுத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள், என்பது புலனுகின்றது அவர்கள் படகுகளை நீரிற் செலுத்த 'கதை' எனும் துடுப்புக்களைப் பயன் படுத்தினர் என்பதனை "கழைமாய் காவிரி" போன்ற அகநானூற்றுச் சான்றுகள் வலியுறுத்துகின்றன. திமில் எனும் சிறு படகினைச் செலுத்துபவர், அம்பி எனும் பெருவகைப் படகினையும் செலுத்த முடியும். பெரும் அம்பியினைச் செலுத்துபவரால் பெரு நாவாய்களையும், கலங்களையும் செலுத்த முடியும் இவர்களே திறமையான முதன் மீகாமர்களாக இருந்திருக்க முடியும் இவர்களைச் சிலப்பதிகாரம் "ஓசுநர்" எனக் குறிக்கிறது

1 ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கை (சிலம்பு. இந் 27)

எவ்வளவு இடர்ப்பாடுகளில் இவர்கள் கலஞ் செலுத்தினர் என்பதை

"கடுங்காற்றெறிய, போகிய துடுப்புடன்
கரியல் சிறுதடிக் கண்கெடப் பாய்தலின்" —(அகம் 366)

எனும் அகநானூற்றுச் சான்று விளக்குகிறது

உணவின்மை, திசையறியக் கூடாமை கடுங்காற்று, அலை கடல். ஆகிய இவ்வளவு முட்டுப்பாடுகளின் இடையே திறமையோடு கடலில் கலஞ் செலுத்தி மீன் கொண்ட பரதவர் கடல்படு பொருட்களில், மீன்களை அல்லாமல் சங்குகள்; முத்துக்கள் இவற்றையும் கொண்டனர் என்பதனை,

1 முழங்குகடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம் போழ்ந் தறுத்த கண்ணேரிலங்கு வினைப்பரதர்
(மதுரைக்காட்சி 315 to 717)

2. வளைபடு முத்தம் பரதவர் பகரும் (ஐங்குறு 195)
3. "வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்
ஒலிதலைப் பனிலம் ஆர்ப்ப" (அகம் — 350)
எனும் பகுதிகள் விளக்குகின்றன.

வேட்டப் பொருட்கள் மீன்களாக அமைந்தவரை உள்நாட்டில் விலைபட்டன. சங்குகளும், முத்துக்களும் இவர்களின் வேட்டப் பொருட்களாய். அமைந்த நிலையில் அவற்றை பெருங்குடி மக்களிடத்தும் அரசரிடத்தும் விற்று பெரும் பொருளீட்டினர் இப்பரதவர்கள், உள்ளூரைக் காட்டிலும் வெளியூர்களில் அம்முத்துக்களும், சங்குகளும் பெருவிலைக்குப் போகும், திறத்தினல் இவர்கள் வெளியூர்களுக்குச் சென்று விலைபேசி பொருள் பெற்றனர், வெளியூரைக் காட்டிலும் வெளி நாட்டினர் இவற்றை மிகுவிலை கொடுத்தலின் வெளி நாட்டிற்குச் சென்று வணிகஞ் செய்து பெரும் பொருளீட்டினர். மேலும் சங்குகளோடும், முத்துக்களோடும் அமையாது, வெளிநாட்டார் வேறு எந்த பொருட்களை விரும்புகின்ளூர்களோ அவற்றையெல்லாம் வணிகத்திற்கு. எடுத்துச் சென்றனர், எனவே நாடுவிட்டும், ஊர் விட்டும் வாழவேண்டியவர்களாக அமைந்தது அவர்களின் வாழ்க்கை. இதனையே

1. "கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்" -(சிலம்பு இந். 11)
2 "கலத்தினுங் காலினுந்தருவனர் ஈட்ட" —(சிலப்பு. மனை 5)
எனும் சிலம்புச் செய்திகள் உறுதி செய்கின்றன.

"புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்" — (புறம் 30) என்ற புறநானூற்று 30 ஆவது பாடல் வெளிநாடு சென்று வணிகஞ் செய்து பெரும்பொருள் ஈட்டி வரும் பரதவரின் மரக்கலங்களைப் பற்றியும், அதன் வளத்தினைப் பற்றியும் கூறுகிறது. இவர்கள் பல்வேறு கூலங்களை வியாபாரம் செய்தனர் என்பதனை.

1 "முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம் போழ்ந் தறுத்த கண்ணே ரிலங்கு விலைப்
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்காழிச் செறுவிற் றீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்"
— (மதுரைக் காஞ்சி 315 — 319)

எனும் பாடற் பகுதி புலனாக்கும்.

இவ்வாறு கடலோடி, வெளிநாடு சென்று வணிகஞ் செய்து வந்தவணிகர்கூட்டத்தில் உழைப்பாலும், திறமையாலும் உயர்ந்த குடி இருத்தல் இயல்பு, அக்குடி மிகுதியான நாவாய்களையும்,

செல்வத்தினையும் தமக்கென உடைமையாகக் கொண்டிருத்தலும் இயல்பு. எனவே அக்குடியுள் வருவோரே இக்கடலோடிகட்குத் தலைவர்களாக இருந்துவந்திருக்கலாம். இவர்களே 'மாநாய்கர்'' எனும் பெயரில் அழைக்கப்பட்ட குடியினராவர் உள்நாட்டில் வணிகஞ் செய்தவரிடையேயும் இத்தகு தலைமைக்குடிகள் இருக்க அக்குடி '' மாசாத்துவர் '' என்னும் பெயரிலழைக்கப்பெற்றது.

இம்மாநாய்க, மாசாத்துவ குடியினர் அரைசுவிழை திருவின ராக மேம்பட்ட செல்வ வளத்தினராக இருந்தமையினாலும், நாட்டின் பொருளாதார வளத்தினைப் பெருக்குகின்ற வணிகஞ் செய்கின்றவர்களாயும் விளங்கிய காரணத்தால் அவர்களை அர சன் முதன்மைக் குடியினராகக் கொண்டிருந்தான் என்பதனை,

'' பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளோடுயர்ந் தோங்கு செல்வத்தான் ''
— (சிலம் மங்,)

என சிலம்பு குறிக்கின்றது.

இத்தகு தலைமை பெற்ற இக்குடி வள்ளண்மை நிறைந்த குடி என்பதனை

'' வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான் ''
'' மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் ''

என சிலம்பு கூறும்

இக்குடியிலே சிறந்த தலைவன் தான் 'அத்தி' எனும் வீரமும். வண்மையும். வலிமையும், நீராடுதற் சிறப்பும் பொருந்தி ஆதிமந்தியாற் தேடப்பட்ட ஆட்டன் அத்தி ஆவான் (விளக் கம் ஆட்டன் அத்தி ஓராய்வு — தமிழ்ப்பொழில்) காண்க

எனவே '' பரதவர் '' என்னும் இனத்தார் இலக்கியக் காலங் களில அரசராலும் மதிக்கப்பெற்று தலைமையிடம் பெற்ற இனத் தார் என்பது விளக்கப்பட்டது. மேலும் அவர்களில் ஒரு சாரார் ' மீன் பிடித்தல் ' தொழிலைச் செய்தது போலவே, உப்பு செய் வோர், கூலம் விற்போர் நாவாய் செலுத்துவோர் (ஓசுநர்) எனவும், முத்து, நவமணிகள், சங்குகள் போன்ற பொருட்களை வெளி நாட்டிற்குக் கொண்டு சென்று வணிகஞ் செய்து பொரு ளீட்டியவர் என்றும் உள்நாட்டில் அரசனின் ஒப்புதல் பெற்று சாத்துக்கள் என்னும் ஒப்ப ஆணைகளோடு வணிகஞ் செய்த பிரிவினர் சாத்தர்கள் என அழைக்கப்பட்ட செய்தியும். வணிக இயல்பினால் கடலோடியவர் மாநாய்கர் எனவும். உள்நாட்டு வணிகம் செய்தோர் மாசாத்துவர் எனவும் அழைக்கப் பெற்ற செய்திகளையும் இக்கட்டுரை நிறைவுபடுத்துவதாம் என்க.

'விளை' யாட்டு

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

(1974)

1. ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரென்(று)
அருளாளர் புகன்றதனை ஆழ்ந்து நோக்கின்
ஆட்டுபவன் பொன்மன்றுள் ஆடுகின்றான்
அவனுட உலகிலுயிர் இன்பா லாடும்
ஈட்டமிக்க உயிராட்டம் ஓய்ந்து விட்டால்
இவ்வுலகில் இருப்பில்லை; இயக்கமெல்லாம்
ஆட்டத்தின் அடிப்படையில் ஆகும் போரில்
ஆடென்றால் வெற்றிஎன அறைவர்மேலோர்

2. காலாட்டம் கையாட்டம் முடங்கி விட்டால்
காணும்விழாக் கொண்டாட்டம் இல்லை. ஆளும்
கோலாட்டம் வளைந்தாடின் குறையும் தீங்கும்
குருட்டாட்டம் ஆடிவரும், கொடுமை யாளர்
வாலாட்டம் வாளாட்டம் ஆடத்தேயும்
வாழ்வாட்டம் வாயாட்டம் இன்றேல் தேயும்
மேலாட்டம் போடுபவர் வீணாட் டாலே
வெறியாட்டும் தலையாட்டும் விளையும்; இன்பம்

3. "விளை" யாட்டிற் காவனசெய் தாடல் வேண்டும்
வீருட்டுச் சீராட்டுப் பாராட் டோடு
களியாட்டு விளையவகை காணல் வேண்டும்
கரப்பாடும் நெஞ்சத்தை உரையாட் டாலே
குளியாட்டிக் கோதாட்டிக் கொள்ளல் வேண்டும்
குணமார்ந்த கொள்கை அறப் போராட்டத்தால்
உளியாட்டச் சிற்பமுரு வாதல் போல
ஒளிர்ந்தாடும், விளையாட்டால் வீறு சேரும்

4. கலையாகும் விளையாட்டுக் களிப்பை நல்கிக்
கவலையொடு துன்பகற்றிப் பகையைப் போக்கும்
நிலையான உறவளிக்கும் நேயஞ் சேர்க்கும்
நெறியொழுக வழிகாட்டி நெடிய வாழ்வு
குலையாத உரமளிக்கும் கூடி வாழும்
குணமளிக்கும் குன்றாத மனமளிக்கும்
தலையாய "விளை" யாட்டைக்கலை உணர்வால்
தாங்கிநலம் உலகெழிலால் தழைக! வாழ்க!

"பூப்பந்திட் டாடுவோம்"

பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

(1975)

1. உலகிலுறு பொருள்களெலாம் உவத்தல் வேண்டின்
உணர்வோடும் துணையோடும் ஒன்றி மாறி
வலமுறுபல் விளையாட்டை வனைந்து மேவல்
மண்ணுலகிற் கியல்பதுவே வாழ்வு மாகும்
நிலவெழுந்து முகங்காட்டி மறைதல், வெம்மை
நிறைகதிர்தன் சுடர் விரித்தல் ஒடுக்கல், விண்மீன்
குலத்தொடுவான் அரங்கத்தில் கரந்தும் பூத்தும்
கோலமுறல், விண்முகில்பல் வண்ணம் பூண்டு

2. திசைபரவி ஓவியஞ்செய் தாடல். காற்றுச்
சில்லென்றும் வல்லென்றும் உருக்கொண் டாடல்
விசையொடுதீச் சுழன்ருடல். அலைக் கைகாட்டி
வேலைநட மாடலெலாம் 'விளை'யாட் டன்றோ
அசைந்தாடென் ருட்டுகிருள் மகவை அன்னை;
ஆடாத போதுந்தா லாட்டித் தொட்டில்
நசைகமழ ஆட்டுகிருள்; நாவாட்டால்தாம்
நாகரிகக் கலை கவிதை கல்வி யாவும்.

3. காராட்டும் கதிராட்டும் கடலுக் காக்கம்
கண்ணுட்டும் கருத்தாட்டும் காதற் காக்கம்
ஏராட்டும் நீராட்டும் பயிருக் காக்கம்
இமையாட்டும் நெஞ்சாட்டும் உயிருக் காக்கம்
பாராட்டும் சீராட்டும் பண்பிற் காக்கம்
படையாட்டும் கொடியாட்டும் வெற்றிக் காக்கம்
போராட்டும் வெறியாட்டும் அழிவிற் காக்கம்
பொய்யாட்டும் புனையாட்டும் பகைமைக் காக்கம்

4. வென்றிபுகழ் வாழ்வுதரும் ஆட்ட மெல்லாம்
விளையாட்டாம் பிற யாவும் வீணுட்டென்ப;
நன்றிவிளை வாக்கியுல கொற்றுமைக்கும்
நாகரிகப் பண்பாட்டுக் கலைக்கும் வித்தாய்த்
தோன்றுமுதல் இயங்கிவரும் விளையாட் டோங்கித்
துலங்குக! நல்விளையாட்டு வீரர் வாழ்க!
மன்றிலருள் நடமாடும் இறைவன் இன்ப
மலரடிக்கிப் பூப்பந்திட் டாடுவோமே.

விளையாடல் புரிவோம் வம்மின்!

ச. பாலசுந்தரம்,
(துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி)

பரவெளியிற் பரந்துதிரிந் தாடுகின்ற
பலகோடி விண்மீன்வான் கோள்கள் ஆடி
உருவெளியிற் சுழலுகின்ற அண்டம் யாவும்
உவமையிலா இறைவனெனும் விளையாட்டாளன்
கரமலரில் ஏந்திவிளை யாடுகின்ற
கட்டமைந்த பந்துகளே, பந்தாட்டத்தின்
மரபுணர்த்திப் புவிப்பூப்பந் தாடுகின்றான்
மன்பதையெல் லாமுவந்திங் காடுதற்கே

ஆடுவதில் வல்லவனென் றறிஞர் கூறும்
ஆழ்ந்தகன்ற தத்துவத்தை மலர்ப்பந்தாடி
ஊடுவதில் கூடுவதில் மாந்தர் காண்பார்
உலகில்விளை பொருள்களெலாம் ஆட்டத்தாலாம்
பாடுபெறும் கதிர்மதிகள் ஆட்டத்தாலே
காலமெனும் பொருள்பிறக்கக் காணுகின்றோம்
ஊடுருவும் காற்றாட்டத்தாலே மண்மேல்
உயிராட உணர்வாடி உடம்பின்பாடும்

விண்வெளியைக் களமாக்கி முகில்கள் ஆட
வீசுகுளிர் காற்றதனோடுறவுற் றாட
மண்வெளியில் மழைக்குழந்தை பிறப்புற்றாடும்
மலைமுகட்டில் அருவிமகள் கால்கொண்டாட

புண்ணியநன் நதிமகவு பிறப்புற்றாடும்
புகுந்தாடும் நதிமகளிர் சதுராட்டத்தால்
பண்ணைவயற் காடுகளிற் பயிர்கள் ஆடும்
பயிராடப் பார்முழுதும் களிப்புற்றாடும்

மெட்டமையாழ் நரம்பாடப் பண்பூத்தாடும்
மெல்லியலார் காலாடக் கலைகளாடும்
கட்டியநல் முழவணைந்து விரல்களாடக்
கணிதமுறு தாளமெலாம் களிப்பாலாடும்
ஒட்டியுளம் உறவாட நட்பூ டாடும்
ஒளிவீசும் ஒற்றுமையிங் காடலுற்றால்
விட்டகலும் துயரமெலாம். அருஞ்செயல்கள்
விளையாட்டாம் விளையாடல் புரிவோம் வம்மின்!

சங்க விளையாட்டுக் கழகத்தின் 1974, 75, 76 ஆம் ஆண்டு மலர்களில் வெளிவந்தவை.

உ

தமிழ் வாழ்க

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

38 - ஆம் ஆண்டுத் தொடக்க விழா

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் முப்பத்தெட்டாம் ஆண்டுத் தொடக்க விழா சூன் திங்கள் முப்பதாம் நாள் மாலை நான்கு மணியளவில், தமிழ்ப் பெருமன்றத்தில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது.

இறை வணக்கத்தினையும், கல்லூரி முதல்வர் திரு. பி. விருத்தாசலனாரின் வரவேற்புரையினையும் தொடர்ந்து தலைமையுரையிலும், பின் தம்முரையிலும், திரு. ம. பொ. சி. அவர்கள், "கானல் வரி ஒரு திருப்பு மையம்" என்னும் தலைப்பில் பேசினார்கள். வரிப் பாடல்கள் என்பனவற்றின் விளக்கமும், கானல் வரியின் சிறப்பும், கோவலன் — மாதவி — கண்ணகி. இவர்களின் இயல் நிலையும், ஊழ்வினையின் வன்மையினை, கானல் வரி உணர்த்து மாற்றினையும், சிலம்பில் கானல் வரியின் இன்றியமையாமையினையும் சிலம்புச் செல்வர் தமக்கே உரிய சிறப்பான அமைப்பு முறையில் பேசியதைப் பெருந் திரளாக வந்திருந்த தமிழன்பர்கள் கேட்டு மகிழ்வுற்றார்கள்.

"சங்க இலக்கியமும், சிலப்பதிகாரமும்" என்னுந் தலைப்பில் சிறப்புரை ஆற்றிய டாக்டர். மெ சுந்தரம் அவர்கள் சிலப்பதிகாரத்தினைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டு அதன் பழமையினை முன்னிறுத்திச் சிலப்பதிகாரத்தின் கால நிலையினை — மேல்நாட்டு அரசியல் வரலாற்றோடு இணைவு செய்து ஆய்வுரை தந்து, சிலப்பதிகாரத்தின் சிறப்புக் கூறுகளை எல்லாம், நகைச் சுவையுடன், அவையினர் மகிழுமாறு இரட்டுற மொழிந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். தம் பேச்சின் நிறைவு நிலையில் "கண்ணகியை ஒத்த மாதர் உலகில் இல்லை. மரபு மீறிய நிலையில் நடுகல் பெற்ற ஒரே பெண் கண்ணகியே யாவார்" என டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் குறிப்பிட்டது மிகச் சிறந்த கருத்தாகும்.

தலைவரின் பின்னுரைக்குப் பின் நாட்டு வாழ்த்தோடு விழா இனிதே நிறைவுற்றது.